நாள் 09.03.2026

CC 46/2017

அசா 1

பெயர் - ஜெயமணி

க/பெ. -வெள்ளியங்கிரி

வயது -50

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of March 2026.

(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜர்)

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

18. நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் கப்பளாங்கறையில் வசித்து வருகிறேன். கண் ஆப்பரேசன் செய்ததால் அங்கு வசித்து வருகிறேன். என்னுடைய கண்ணில் என்ன பிரச்சனை என்றால் கண் தெரியாமல்போனதால் அதற்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. என்னுடைய கண்ணுக்கு பிரச்சனை எப்போது ஏற்பட்டது என்றால் தீபாவளி சமயத்தில் சோளத்தட்டை அறுக்கும்போது கண்ணில்பட்டதால் எனக்கு பிரச்சனை ஏற்பட்டது. எந்த கண்ணுக்கு பிரச்சனை என்றால் வலது கண்ணுக்கு பிரச்சனை ஏற்பட்டது. தற்போது என்னுடைய கண் பார்வை எவ்வாறு உள்ளது என்றால் கண்ணாடி அணியச்சொல்லியுள்ளார்கள். தற்போது நன்றாக உள்ளது.

19. இடது கண் எப்படி உள்ளது என்றால் அதிலும் நீர் வழிந்துகொண்டிருக்கிறது அதற்கும் அறுவை சிகிக்சை மேற்கொள்ள வேண்டும். பார்வை குறைபாடு இருப்பதால்தான் அறுவை சிகிக்சை செய்யவேண்டுமென்று மருத்துவர்கள் ஆலோசனை கூறியுள்ளார்கள் என்றால் இடது கண்ணில் நீர் கசிவதாலும் எழுத்துக்கள் மங்கலாக தெரிவதாலும் அறுவை சிகிக்சை மேற்கொள்ளச் சொன்னார்கள். வயது மூப்பு காரணமாக பார்வை குறைபாடு (சாலேஸ்வரம்) ஏற்பட்டது என்றால் சரிதான். பார்வை குறைபாடு இருந்த காரணத்தினால்தான் நான் கப்பலாங்கறையில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆனால் இரண்டு தோட்டத்திற்கும் நான் சென்று வருவேன்.

20. அறுவை சிகிக்சை மேற்கொண்டு அதற்குண்டான தொடர் சிகிக்சையில் இருந்ததால் நீதிமன்ற விசாரணைக்கு என்னால் வர இயலவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவருக்கும் எதிரிகளுக்கும் இடையே பொதுக்கிணறு மற்றும் பொது இடம் சம்மந்தமாக பிரச்சனை இருந்ததால் ஏற்கனவே ஒரு புகார் வடக்கிபாளையம் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஆனால் அந்த புகார் வாபஸ் பெறப்பட்டது. பொய் புகார் என்ற காரணத்தினால் போலீசார் அந்த புகாரை முடித்து வைத்தார்கள் என்றால் சரியல்ல.

21. எனது கணவர் மற்றும் எதிரிகள் ஈஸ்வரமூர்த்தி. திருமூர்த்தி மற்றும் ஆறுச்சாமி ஆகியோர்களுக்கு பொது உடமைப்பட்ட பொதுக்கிணறு மற்றும் இடம் ஆகியவற்றை அவர்களுக்கு கொடுக்காமல் அபகரிக்கவேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் மேலும் ஏற்கனவே இருந்த காழ்ப்புணர்சியிலும் அவர்கள் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டள்ளது என்றால் சரியல்ல. கடந்த 30.10.2015 அன்று காலை சுமார் 10.00 மணியளவில் எங்களுக்கு சொந்தமான மாடு எதிரிகள் திருமூர்த்தி மற்றும் ஆறுச்சாமி ஆகியோர்களுக்கு சொந்தமான இடத்தில் விவசாயம் செய்யப்பட்டு வந்த ஹைபிரைட் பொடி தக்காளி செடிகளை மேய்ந்ததால்தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அதனால் அந்த சம்பவத்திற்கு பிறகு உடனடியாக என்னுடைய மாட்டை எதிரி ஆறுச்சாமி அவருடைய காட்டில் அதே இடத்தில் கட்டி வைத்துவிட்டார் என்றால் சரிதான்.

22. என் வீட்டின் அருகே வசித்து வரும் காளியப்பன், காளிமுத்து, ராமலட்சுமி, பிரேமா, காந்திமதி ஆகியோர் அன்றைய தினமும் மாலை சுமார் 06.30 மணியளவில் அங்குதான் இருந்தார்கள் என்றால் அவர்கள் அவர்களுடைய வீட்டில்தான் குடியிருந்து வந்தார்கள். ஆனால் என்னை அடிக்கும்போது யாரும் வரவில்லை. எதிரிகள் என்னை அடித்ததாக கூறுவது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் மேற்படி வீட்டிற்கு அருகில் வசித்து வரும் நபர்களின் பெயர்களை என்னுடைய முதல் விசாரணையில் கூறியிருப்பேன் என்றும் அவ்வாறு சம்பவம் எதுவும் நடக்காத காரணத்தினால்தான் எதிரிகள் மீது காழ்பபுணர்மச்சியில் என்னுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களான வேலுச்சாமி மற்றும் பூவாத்தாள் ஆகியோர்களின் பெயர்களை மட்டுமே நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

23. என் கணவரின் தகப்பனார் சுப்பையா கவுண்டர் மற்றும் எதிரிகள் ஈஸ்வரசாமி, திருமூர்த்தி மற்றும் ஆறுச்சாமி ஆகியோர்களின் தகப்பனார் கந்தசாமி கவுண்டர் என்பவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு சுப்பையா கவுண்டர் மற்றும் கந்தசாமி கவுண்டர் ஆகிய இருவரும் சகோதரர்கள் என்று எனக்கு நன்கு தெரிந்துகொண்டு வேண்டுமேன்றே நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் (சாட்சி வேண்டுமென்றே எதிரிகள் பொய் கூறினால் நீங்கள் கேட்டுக்கொள்கிறீர்கள் என்று எதிரிகள் தரப்பு வழக்கறிஞரை பார்த்து கேட்டார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் இவ்வாறு பேசக்கூடாது என்ற சாட்சியை கூறியும் ஆமாம் நான் தெரிந்துகொண்டே தெரியாது என்று பொய் கூறுகிறேன் என்று எழுதிக்கொள்ளுங்கள் என்று கூறினார்)

24. மேற்படி சுப்பையா கவுண்டர் மற்றும் கந்தசாமி கவுண்டர் ஆகிய இருவருக்கும் கூட்டாக உள்ள பொதுக்கிணறு மற்றும் இடம் என்னுடைய கணவரின் இடத்திற்குள் உள்ளது என்றால்

அதைப்பற்றி எனக்கு தெரியாது. அதனை அளந்து பார்த்தால் மட்டுமே கூற இயலும். எதிரி ஈஸ்வரசாமியின் மகனின் பெயர் பாலமுருகன் என்றால் சரிதான். என்னுடைய வீடும் எதிரிகள் ஈஸ்வரசாமி, திருமுர்த்தி மற்றும் ஆறுச்சாமி என்பவர்களின் வீடும் அருகில் அமைந்துள்ளது என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் வேலைக்கு சென்றுவிட்டு இரவு நேரத்தில்தான் வீட்டிற்கு திரும்புவார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது.

25. கடந்த 30.10.2015 அன்றும் எதிரிகள் திருமூர்த்தி மற்றும் ஈஸ்வரசாமி ஆகிய இருவரும் காலை வேளையில் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 09.00 மணிக்குதான் வீடு திரும்பினார்கள் என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு எதிரே பொது மக்கன் பயன்பாட்டிற்கு உள்ள பொதுப்பாதை எதுவும் இல்லை என்றும் தனியார் தோட்டங்கள்தான் உள்ளது என்றால் சரிதான். எதிரி பாலமுருகன் கடந்த 15 வருடங்களாக பால் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. பாலமுருகன் என்ன தொழில் செய்கிறார் என்பதை நன்கு தெரிந்துகொண்டு வேண்டுமென்றே நீதிமன்றததில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

26. கடந்த 30.10.2015 அன்று காலை சுமார் 03.30 மணி முதல் 08.30 மணி வரை மற்றும் மாலை 03.30 மணி முதல் இரவு 08.30 மணி வரை எப்போதும்போல் பால் வியபாரம் செய்வதற்கு சென்றுவிட்டார் என்றும் சம்பவ இடத்தில் அவர் இல்லை என்றால் சரியல்ல. கடந்த 30.10.2015 அன்று மாலை 06.30 மணியளவில் எதிரி ஆறுச்சாமி என்னுடைய மாட்டை அவருடைய பூமியில் இருந்து காவல் நிலையம் அழைத்துச்செல்ல முற்பட்டபோது அவரை கல்லால் தாக்கி எட்டி உதைத்து கட்டையால் அடித்து காயம் ஏற்படுத்தி என் மாட்டை அவரிடம் இருந்து பிடுங்கிக்கொண்டு என் தோட்டத்திற்கு நான் வந்தேன் என்றால் சரியல்ல. அவருடைய அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கதினர் அங்கு வந்தார்கள் என்றும் நாய்கள் குரைத்தன என்றும் அதனால் சம்பவ இடத்தில் இருந்து நானும் என்னுடைய கணவரும் தப்பித்து ஓடும்போது கிழே விழுந்து எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

27. கடந்த 30.10.2015 அன்று நானும் என்னுடைய கணவரும் வேண்டுமேன்றே எங்கள் மாட்டின் கயிற்றை அவிழ்த்துவிட்டு எதிரி ஆறுச்சாமி மற்றும் திருமூர்த்தி அவர்களுக்கு சொந்தமான தோட்டததில் உள்ள ைஹபிரைட் பொடித்தக்காளி கொடிகளை உண்பதற்கு விரட்டிவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால்தான் நல்ல நிலையில் மாட்டுடன் இருந்த கயிற்றை பிடித்து அதே இடத்தில் அவருடைய தோட்டத்தில் ஆறுச்சாமி கட்டி வைக்க முடிந்தது என்றால் சரியல்ல அது பொய்யான சங்கதி. நான் பொய்சாட்சியமளிக்கிறேன் என்றும் முதல் விசாரணையில் கூறியுள்ளபடி மாட்டின் கயிறு அறுபடவில்லை என்றால் சரியல்ல.

28. நானும் என்னுடைய கணவரும் வேலுச்சாமி என்பவருக்கு சொந்தமான எக்சல் Heavy duty இருசக்கர வாகனத்தில் 3 கி.மீ வரை மைய சாலையில் வேலுச்சாமி என்பவருடன் பயணம் செய்தோம் என்று எனது குறுக்கு விசாரணையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது குறுக்கு விசாரணையின்போது முதலில் வேலுச்சாமி என்ற நபருடன் நானும் எனது கணவரும் இருசக்கர வாகனத்தில பணயம் செய்தோம் என்று கூறிவிட்டு தற்போது அதற்கு முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 30.10.2015 அன்று நானும் எனது கணவரும் எதிரி ஆறுச்சாமி என்பவரை தாக்கியதில் இருந்து தப்பிக்கவும் அவருடைய ை ஹபிரைட் தக்காளி கொடிகளுக்கு சேதம் ஏற்படுத்தியதில் இருந்து தப்பிக்கவும் வேண்டுமேன்றே எதிரிகள் அனைவரும் மீதும் காவல் நிலையத்தில் பொய்யான புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

29. கடந்த 30.10.2015 அன்று நான் புகார் ஒன்று கொடுத்தேன் என்றும் அதன் பின்னிட்டு இரண்டாவதாக மற்றொரு புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். இரண்டு நபர்கள் அதில் தலைமறைவாக இருந்ததால் புகார் கொடுக்கவேண்டும் என்று கூறியதால் கொடுத்தேன். கோயமுத்தூரில் உள்ள காவல் உயர் அதிகாரிகள் சிபாரிசின்பேரில் நான் இரண்டாவது புகார் கொடுத்தேன் என்றால் வடக்கிபாளையம் காவல் நிலையத்தில் புகார் எடுக்காததால் கோயமுத்தூருக்கு நாங்கள் இருவரும் சென்றோம்.

30. முதல் புகாரை நானும் என்னுடைய கணவரும் படித்து பார்த்துதான் கையொப்பமிட்டுக் கொடுத்தோம் என்றும் பொது கிணறு மற்றும் இடம் சம்மந்தப்பட்ட காழ்ப்புணர்ச்சி காரணமாக இரண்டு நபர்களையும் சேர்க்கவேண்டும் என்ற நோக்கத்தில் மீண்டும இரண்டாவதாக ஒரு பொய்யான புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. நானும் என்னடைய கணவரும்எதிரிகளுககு எதிராக கொடுத்த புகாரில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல.

31. உண்மைத்தன்மை இல்லாத காரணத்தினால்தான் புகாரில் இருந்து வேறுபட்டு நானும் எனது கணவரும் போலீசார் விசாரணையின்போது ஒரு சங்கதிகயையும் நீதிமன்றத்தில் முதல் மற்றும் குறுக்கு விசாரணையில் வேறுபட்ட சங்கதிகளையும் சாட்சியமளித்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரிகள் ஈஸ்வரசாமி, திருமூர்த்தி, ஆறுச்சாமி மற்றும் அத்திகாடு ராசு(எ)ஆறுமுகம் என்பவர் என்ன தொழில் செய்துவருகிறார்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி எதிரிகள் நான்கு பேரும் என்னுடைய உறவினர்கள் என்றும் அவர்கள் என்ன தொழில் செய்கிறார்கள் என்பது திருமணத்தின்போதே எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக நான் பொய் சாட்சியமளிக்கிறேன்எ ன்றால் சரியல்ல.

32. நான் கூறிய சம்பவ நேரம், இடம் மற்றும் நாளன்று எதிரிகள் யாரும் சம்பவ இடத்தில் இல்லை என்றும் பொது இடம் மற்றும் கிணறு ஆகியவற்றில் எதிரிகள் எந்த உடமையும் பெற்றுவிடக்கூடாது என்ற காரணத்தினால் காழ்ப்புணர்ச்சியில் அவர்கள் மீது பொய்யான புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் வேறு வகையில் ஏற்பட்ட காயத்தைக் கொண்டு வேண்டுமேன்றே எதிரிகள் மீது மேற்கூறிய காழ்ப்புணர்ச்சியின் காரணமாக பொய் புகார் கொடுத்து நீதிமன்றத்தில் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விவசாயம் மற்றும் ஆடு, மாடு மேய்க்கும் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். ஆடு மற்றும் மாடு மேய்ச்சலின்போது இழுத்தால் மேய்ப்பவர் விழுவதற்கான வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்

<u>மறுவிசாரணை</u> - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.